# ராஜாவாயிருக்கும்படி வற்புறுத்தப்பட்டவர் (6:1-15)

உகாண்டா நாட்டில் பசோகா மக்கள் மத்தியில் ஊழியம் செய்கின்ற ஜான் பர்ட்டன் என்ற ஊழியர், ஒரு கிராமத்தில் இரு மாறுபட்ட வேதாகமங்களிலிருந்து வாசிக்க மிகவும் கடினமாக முயற்சி செய்து கொண்டிருந்த ஒரு வயது முதிர்ந்த மனிதரைச் சந்தித்தார். அவ்விரு வேதாகமங்களில் எதுவும் அவருடைய மொழியில் எழுதப்பட்டிருக்க வில்லை, எனவே அந்த வயது முதிர்ந்த மனிதர் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். ஜான், லசோகா மொழியை அதிகம் பேச முடியாதிருப்பினும், மற்றும் அந்த வயது முதிர்ந்த மனிதர் ஆங்கிலத்தில் அதிகம் பேச முடியாதிருப்பினும், அம்மனிதர் என்ன வாசிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார் என்பது பற்றி அவ்விருவரும் சற்று நேரம் பேசினார்கள். பசோகா மக்கள் வேதாகம ரீதியிலான செய்தியைப் பெறுவதற்காகக் கொண்டிருந்த பிரச்சனை என்னவென்றால், பசோகா "உங்கள் மொழியை (விலை கொடுத்து) வாங்க வேண்டும்" என்பதேயாகும் என்று அந்த மனிதர், ஜானிடம் கூறினார். முதலில் ஜான் தாம் கேட்டுக் கொண்டிருந்தது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தார். இருப்பினும், கடைசியில் அவர், அந்த வயது முதிர்ந்த மனிதர் தனது மக்கள் ஆங்கிலத்தில் உள்ள வேதாகமத்தை வாசித்து கலந்துரையாடல் செய்வதற்காக, பள்ளிக் கட்டணம் செலுத்தி ஆங்கிலம் பேசும் பள்ளிகளில் படிக்க வேண்டியிருந்தது என்று கூறுவதை உணர்ந்தறிந்தார்.

ஜான் தமது பதிலை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தார்:

> நான் அந்த வயது முதிர்ந்த மனிதரிடத்தில், பசோகாவுக்குச் செய்தியை "இலவசமாய்" கொண்டு வருவதற்காக நான் அவருடைய மொழியைக் கற்றுக் கொண்டிருந்ததாகக் கூறினேன். அவர் மெய்சிலிர்த்துப் போய், நான் அவரை காண்பதற்கு மீண்டும் வர வேண்டும் என்று விரும்பினார்.
>
> "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு நம்மிடத்திற்கு வந்தார். அவர் நமது மொழியை பேசினார். அவர் நமது உலகத்தில் வாழ்ந்தார். அவர் நம்மில் ஒருவரானார். அவர் இடைவெளிக்குப்

பாலமிட்டு இணைத்தார்; நாம் அதைச் செய்யும்படி அவர் ஏற்படுத்தவில்லை. மற்றும் இதன் விளைவாக அவர் தம்முடைய மகிமையை நமக்குக் காண்பித்தார். "அது பிதாவினிடத்திலிருந்து வந்த ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது, அது கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருந்தது"[1]

ஜான் பர்ட்டன் போன்ற மக்கள் இயேசுவின் வரலாற்றை மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொழுதெல்லாம் தேவனுடைய மகிமையானது வெளிப்படுத்தப்படுகின்றது. யோவான் 6:1-15ல், இந்தத் தடவை இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த வரலாற்றில் தேவனுடைய மகிமை மீண்டும் காணப்படுகின்றது.

## வரலாறு (6:1-15)

யூதர்களின் பண்டிகையொன்றின் போது, இயேசு எருசலேமில் போதித்தது பற்றி அதிகாரம் 5ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரம் 6, இயேசு தமது சீடர்களுடன் கலிலேயாக் கடலைக் கடந்து சென்ற கலிலேயாவின் பகுதிக்கு இயேசு திரும்பச் சென்றதிலிருந்து தொடங்கு கின்றது. அந்த வேளையில் அவருடைய புகழானது உயரப் பரவிக் கொண்டிருந்தது. அவர் நிகழ்த்திக் கொண்டிருந்த அற்புத "அடையாளங் களை"ப் பற்றி மக்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வசனம் 2, தொடர் செயலைச் சுட்டிக்காட்டும் கிரேக்க எச்ச வினைகள் மூன்றைக் கொண்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "இயேசு செய்யத் தொடர்ந்தவற்றைக் காணத் தொடர்ந்திருந்த காரணத்தினால் திரளான மக்கள் அவரைத் தொடர்ந்து பின்சென்றனர்'' என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாக உள்ளது.

"அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது" (6:4) என்பதே யோவானால் உள்ளடக்கப்பட்ட அடுத்த விபரமாக இருக்கின்றது. "யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்த'' (2:13அ) போதுதான் தேவாலயத்தைச் சுத்திகரித்தலும் நடைபெற்றிருந்தது. காண்பதற்கு மிகச் சிறியதாயிருக்கக் கூடிய இந்த விபரமானது அந்த நாளில் இயேசுவைக் காணவும் அவரது போதனையைக் கேட்கவும் ஏராளமான மக்கள் வந்தது ஏன் என்பதை அநேகமாய் விளக்கப்படுத்துகின்றது. முதல் நூற்றாண்டு இஸ்ரவேலில் பஸ்கா காலம் என்பது நாட்டுப் பற்றுணர்வு உயர்ந்து ஓடும் காலமாய் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் யூதர்கள் எருசலேமில் ஒன்றுகூடி, தங்களின் ரோம அதிகாரிகளைத் தள்ளிவிடவும், விடுதலையான சுயாதீனமான இஸ்ரவேல் அரசை அமைப்பதற்கும் அந்த ஆண்டில் மேசியா வருவாரா என்று காணக் காத்திருப்பார்கள்.

இதன் விளைவாக, அற்புதங்களை நிகழ்த்தியதால் இயேசு கலிலேயா வின் மக்களை உணர்வெழுச்சியடையச் செய்த பொழுதும், மற்றும் பஸ்காவானது சமீபத்தில் இருந்த பொழுதும், யூதர்கள் தாங்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த யூதர்களின் அரசர் இயேசுவாய் இருக்கலாம் என்ற பலத்த எதிர்பார்ப்பினால் நிறைக்கப்பட்டிருந்தனர்!

அந்த நாளில் ஐயாயிரம் ஆண்கள் (6:10) இயேசுவைப் பின்பற்றிய பொழுது, அவர்கள் ஆர்வத்தின் காரணமாக வந்த சாதாரண கூட்டமாக மட்டும் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் யுத்தம் செய்ய மேசியாவைப் பின்பற்றத் தயாராக இருந்த சூடான இரத்தம் கொண்ட யூத வீரர்களாகவும் இருந்தனர். இயேசு கூறுவதைக் கேட்பதற்காக கலிலேயாவின் கடலுக்கு அப்பாலிருந்த பகுதிக்குச் செல்லும்படியாக, விவசாயிகள் தங்கள் மண் வெட்டிகளைப் போட்டு விட்டு, கடைக்காரர்கள் தங்கள் கடைகளை மூடி விட்டு வந்திருந்தனர்.

மலையினருகில் திரளான கூட்டத்தார் இயேசுவினிடம் வந்ததை அவர் கண்டபொழுது, அந்தப் பகுதியைச் சேர்ந்தவரான பிலிப்புவினிடத்தில் (1:44) அவர், ''இவர்கள் சாப்பிடத் தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?'' (6:5ஆ) என்று கேட்டார். இயேசு நிகழ்த்தியிருந்த மற்ற அடையாளங்களைப் பிலிப்பு அறிந்திருப்பினும், அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சிறிது உணவளிப்பதாயிருந்தாலும் கூட எட்டு மாதக் கூலிப் பணம் கூட அதை வாங்கப் போதுமானதாக இராது என்று அவர் (பிலிப்பு) பதில் அளித்த பொழுது இயேசுவிடம் சிறிதளவு விசுவாசத்தையே காட்சிப் படுத்தினார் (6:7). இந்த வேளை யாவற்றிலும், இயேசு திரளான கூட்டத்திற்குத் தாம் செய்யப் போவது பற்றி அறிந்திருந்தார்.

அந்த வேளையில், கூட்டத்தில் ''ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்'' வைத்துக் கொண்டிருந்த ஒரு சிறுபையனைப் பற்றி[2] அந்திரேயா இயேசுவிடம் கூறி, பின்பு "அவைகள் இத்தனை ஜனத்துக்கு எம்மாத்திரம்?" (6:9) என்று கேட்டார். மற்றவர்களை இயேசுவினிடம் கொண்டு வருபவராகவே அந்திரேயா யோவானின் புத்தகத்தில் தோன்றுகின்றார்.[3] "அப்பங்கள்'' மற்றும் "மீன்கள்'' என்பவற்றை இன்றைய நாட்களில் சில வேளைகளில் கடையில் காணப்படும் ஒன்றாக விளக்கியுரைக்காதபடி நவீன வாசகர் கவனமாய் இருக்க வேண்டும். அப்பங்கள் என்பது அநேகமாக அந்த நாட்களில் ஏழை மனிதரின் எளிய உணவாயிருந்த சிறிய, வட்டவடிவான பார்லி அப்பங்களாக (சற்றுப் பெரிய அளவிலான இரவு உணவுச் சுருள்) இருந்திருக்க வேண்டும். மீன்கள் என்பது உணவுக்குச் சுவையைப் பங்களிக்கின்ற கடிக்கும் அளவுள்ள சிறு துண்டுகளாகவே இருந்திருக்கும். இருப்பினும், தேவனுடைய குமாரனுக்கு அது போதுமானதைக் காட்டிலும் அதிகமானதாகவே இருந்தது!

மக்களைப் புல் தரையில் அமரச் செய்யும்படி இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கூறினார், அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அடுத்து நடந்த நிகழ்ச்சியானது, ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்களைக் கொண்டு ஐயாயிரம் மக்களுக்கு உணவளிக்க முடிந்தது எப்படி என்பதற்கு மனித ரீதியான சில விளக்கங்களைக் காண மக்கள் காலங்கள் தோறும் முயற்சிக்கின்ற அளவுக்கு நம்ப முடியாததாக இருந்தது. இருப்பினும், இயேசு அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அப்பங்களையும் மீன்களையும் பலுகச் செய்த இந்த நிகழ்ச்சி மறுக்க முடியாத ஒரு அற்புதம் என்று யோவான் அறிவித்தார். மக்கள் "அவர்களுக்கு வேண்டியமட்டும்" (6:11) பெற்றனர் மற்றும் ''அவர்கள் திருப்தியடைந்தபின்பு'' (6:12) மீதியான

துணிக்கைகளினாலே பன்னிரெண்டு கூடைகளை நிரப்பினார்கள். அந்தக் கூட்டத்தில் யுத்தத்திற்குச் செல்லப் போதிய பலம் பெற்ற - மற்றும் ஏராளமான அளவு உணவை உண்ணப் போதிய அளவு பசியுள்ள ஐயாயிரம் ஆண்கள் இருந்தனர் என்பதை நினைவில் வையுங்கள்!

மக்கள் "அடையாளத்தைக்" (6:14) கண்ட பொழுது, தேவனுடைய கரமானது ஒரு விசேஷித்த வழிமுறையில் இயேசுவுடன் இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்தனர். இவர் தான் "உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" என்று அவர்கள் முடிவு செய்தனர் (6:14). வருகிறவரான தீர்க்கதரிசியைக் குறித்து இந்த எதிர்பார்ப்பானது மோசே ஏற்படுத்தியிருந்த பின்வரும் கூற்றைக் கொண்டிருந்த நியாயப்பிரமாணத்தின் போதனையினுடைய அடிப்படையில் அமைந்திருந்தது: "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" (உபா. 18:15).

ஒரு சில வசனங்களுக்குப் பின் மோசே, "உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்" (உபா. 18:18) என்று கர்த்தரைக் குறிப்பிட்டார். அந்த ஐயாயிரம் பேர்களுக்கும், இந்த வார்த்தைகள் அவர்களின் செவிகளில் எதிரொலிக்க, நாட்டுப் பற்றுக் கனவுகள் அவர்களின் இருதயங்களில் கனன்று கொண்டிருக்க, மற்றும் அவர்களின் உணவுத் துணுக்குகள் அவர்களின் தாடிகளில் ஒட்டிக் கொண்டிருக்க, அவர்கள் "வந்து தம்மை (இயேசுவை) ராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக மனதாயி"ருந்த (6:15) எதிர்காலப் புரட்சியாளர் களாக இருந்திருப்பார்கள். இப்படிப்பட்ட நோக்கமானது இலேசாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாததாக இருந்தது. அவர்கள் இயேசுவை ராஜாவாக்கியிருந்தால், அவர்களின் செயல்பாடுகளை ஒரு யுத்த அறிவிப்பாக ரோமாபுரி அதிகாரங்கள் கண்டிருக்கும். ஒரு ராஜா முடி சூட்டப்படுவதற்கு இன்னொரு ராஜா நீக்கப்பட வேண்டும். அப்படியிருப்பினும், அதுவே அவர்களின் நோக்கமாயிருந்தது!

## வரலாற்றின் எஞ்சிய பகுதி

இந்த வேத வசனப் பகுதியில் இன்னும் அதிகமாய்ச் செல்லுமுன், அந்த நாளில் ஐயாயிரம் பேர் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்று நாம் கற்பனை செய்து பார்ப்போம். இயேசுவை அவர்கள் தங்களுடைய ராஜா என்று அறிவித்தவுடன் என்ன நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்க முடிந்தது? இயேசுவின் அற்புத உணவினை அவர்கள் வயிறார உண்ட பிறகு, அவர்கள் அநேகமாக, இயேசு எங்காவது ஒரு பட்டயத்தைக் கண்டு அதைப் பலுகச் செய்து விவசாயிகள் மற்றும் கடைக்காரர்கள் கொண்ட அந்தக் கீழ்த்தனமான படைக்கு வேண்டிய ஆயுதங்களை அளிப்பார் என்று எதிர்பார்த்திருக்கலாம். பிறகு, சூரிய ஒளியில் அவர்களது பட்டயங்கள் பிரகாசிக்க, அவர்கள் கலிலேயாக் கடலைக் கடந்து திபேரியாவுக்கு எதிராக

அணிவகுத்துச் செல்லலாம். ஒரு சிறிய கட்டளையில், அவர்கள் அந்த நகரை மேற்கொண்டு, பிறகு தங்கள் கடைசி இலக்கான எருசலேமை நோக்கி அணிவகுத்துச் செல்லலாம். அது பஸ்கா காலமாய் இருந்ததால், ரோமப் படையினர் அங்கு தங்கியிருப்பதை அவர்கள் காண்பார்கள். போரானது உக்கிரமாயிருக்கும், ஆனால் கடைசியில் ரோமர்கள்மேல் வெற்றி கொள்வார்கள்.

இயேசுவும், சாதாரண மனிதர்களைக் கொண்ட அவரது படையும் தேவாலயத்தின் எல்லா அசுத்தங்களையும் தவறான பயன்பாடுகளையும் சுத்திகரித்து விடுவார்கள் மற்றும் சதுசேயர்கள் அவர்களின் அதிகாரமுள்ள பதவிகளிலிருந்து தள்ளப்படுவார்கள். எருசலேமைக் கைப்பற்றியது பற்றிய வார்த்தையானது ரோமாபுரி சென்றடையும் பொழுது, ரோமாபுரியின் வல்லமை மிகுந்த படையணிகள் இயேசுவுக்கும் அவருடைய படைக்கும் எதிராகக் கொண்டு வரப்படும். காணக்கூடிய மற்றும் தீர்மானமான ஒரு போராட்டத்தில் ஒரு புது உலகப் பேரரசினை ஆக்குவதற்காக யூதர்கள் ரோமர்களை நசுக்குவார்கள். ஐயாயிரம் மனிதர்களைக் கொண்ட இயேசுவின் எதிர்காலப் படையில் இருந்த சராசரி மனிதர் என்ன நடக்கும் என்று யூகித்திருந்தது இதுவாகவே இருக்கும்! இருப்பினும், இயேசு தம்முடைய சிந்தையில் வேறு சில விஷயங்களைக் கொண்டிருந்தார்.

## அவர்களுடைய மற்றும் நம்முடைய தவறு

எதிர்பார்ப்புகள் உயர்ந்து ஓடிய மற்றும் உணர்வெழுச்சிகள் கட்டுக்கடங்காதிருந்த அந்த நிலையில், மிகவும் எதிர்பார்க்கப்படாத ஒரு விஷயத்தை இயேசு செய்தார். அவர், "மறுபடியும் விலகி, தனியே மலையின் மேல் ஏறினார்" (6:15). அந்த நாளில் அநேகமாக அவர் மட்டுமே அந்த மலை முழுவதிலும் இருந்த ஒரே ஒருவராகத் தாம் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொண்டிருந்தவராக இருக்க வேண்டும். பன்னிருவருக்கும், மற்றும் இருந்த பின்பற்றாளர்கள் ஐயாயிரம் பேருக்கும், இயேசு தாம் நிறைவேற்றுவதற்காகக் கடினமாய் உழைத்திருந்த இலக்கை விட்டே அவர் விலகிச் சென்றிருந்தார் என்றே காணப்பட்டது.

தமது நாட்டின் தலைவராவதற்காகத் தம் வாழ்வின் நான்கு ஆண்டுகளை அர்ப்பணித்துள்ள ஒரு நபரைப்பற்றிய விஷயமே இங்கு நான் ஒப்புவமையாகச் சிந்திக்கக் கூடியதாக உள்ளது. அவர் நீண்ட நேரங்கள் முகாம்களிட்டு, ஒவ்வொரு ஆண்டின் ஐம்பத்திரண்டு வாரங்களிலும் தனது பணிக்கான வேட்பை மேம்படுத்துகின்றார். பிறகு, அந்தக் கடினமான உழைப்பு யாவும் கடைசியில் அவருக்குப் பலன் அளிக்கின்றது: முதன்மைத் தேர்தல்களில், அவர் தம் கட்சியின் சார்பில் வேட்பாளராவதற்குப் போதிய அளவு ஆதரவுள்ள வாக்குகளைப் பெறுகின்றார். இருப்பினும், மாநாடு நடத்தப்பட்டு வேட்பு ஓட்டுகள் போடப்பட்ட பொழுது நினைத்துப் பார்க்க முடியாத சில விஷயங்கள் நடக்கின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் ஆதரவாகக் கூக்குரலிட்டு, வேட்பாளரின் பெயர் தாங்கிய அடையாளங்களை உயர்த்தி ஆட்டிக் கொண்டிருக்கையில், அந்த மனிதர்

தம் நாற்காலியிலிருந்து திடீரென்று எழுந்து, மாநாட்டு மையத்தை விட்டு வெளியே நடந்து செல்லுகின்றார். இப்படிப்பட்ட ஒரு செயலானது நினைத்துப் பார்க்க முடியாததாக உள்ளது - ஆனால் ஐயாயிரம் பேர் இயேசுவைத் தங்கள் ராஜாவாக்க தயாராயிருந்த பொழுது இயேசு செய்ததைக் காட்டிலும் இச்செயல் அதிகம் நினைத்துப் பார்க்க முடியாததாக இருப்பதில்லை.

இயேசு தம்முடைய நிறைவான இலக்கின் மேல் கவனமாயிருக்கும் தம்முடைய இணையற்ற வல்லமையை மீண்டும் செயல்விளக்கப் படுத்தினார். அந்தக் கூட்டத்தாரின் அதிகப் புகழ்ச்சியான நோக்கங்கள் தேவனுடைய நிறைவான நோக்கத்தை நிறைவேற்றச் செய்யாது என்பதை அவர் அறிந்தார்; (மக்கள்) கடலில் இருந்து எழும் ஒரு புரட்சி என்பது பாவத்திலிருந்து இந்த உலகை மீட்காது. மேலும், அவர்களின் அப்போதய சிந்தை அமைவில் அவர்களுடன் வாதிடுவதற்குக் காரணம் எதுவும் இல்லை என்பதையும் அவர் அறிந்தார். ஆகையால் அவர் எளிமையாகப் புறம்பே நடந்து சென்றார்.

இந்த வேதபாடப் பகுதியின் "கண்ணாடியில்" நான் காணும் இரண்டு காட்சிகள் என்னைக் கவலையடையச் செய்கின்றன. இயேசுவை நமது வார்ப்படத்தினுள் வலிந்து தள்ள முயற்சிக்கும் நமது மனித ரீதியான விருப்பம் என்பது எனது முதல் கவலையாக உள்ளது. நாம், இயேசு யாராக இருக்கின்றார் என்று அவரே நம்மிடத்தில் காண்பிக்க அனுமதிப்பதற்கு மாறாக நமது எதிர்பார்ப்புகளை இயேசுவின் மீது வைக்க விரும்புகின்றோம். இயேசு நம்மைப் போன்றவராகவே இருக்கின்றார் என்று சில வேளைகளில் நாம் யூகிப்பதில்லையா? அமெரிக்கர்கள் அவரை அமெரிக்கர் என்று நினைக்கத் தலைப்படுகையில், இத்தாலியர்கள் அவரை ஒரு இத்தாலியர் என்று நினைக்கத் தலைப்படுகின்றனர். ஆங்கிலம் பேசும் மக்கள் இயேசு ஆங்கிலம் பேசினார் என்று யூகிக்கையில், ஸ்பானிஷ் பேசும் மக்கள் இயேசு ஸ்பானிஷ் மொழியை விரும்பினார் என்பதாக உறுதிபடக் காண்கின்றனர். பணக்காரர்கள் அவரைப் பணக்காரராகவும், ஏழைகள் அவரை ஏழையாகவும் காண்கின்றனர். கல்வி கற்றவர்கள் இயேசுவைக் கல்வியறிவு பெற்றவரென்று சித்தரிக்கின்றனர், மற்றும் கல்வியறிவு பெறாதவர்கள் பள்ளிப் படிப்பின் மீது தங்களின் நம்பிக்கையின்மையை அவர் பகிர்ந்து கொண்டதாக நம்பியிருக்கின்றனர். உணர்வுப்பூர்வமான மக்கள் இயேசுவை உணர்வுப் பூர்வமானவராகக் கண்ணோக்குகையில், அமைதியான மக்கள் தங்கள் அமைதியான நடக்கையை இயேசு பகிர்ந்து கொண்டார் என்று உரிமைகோருகின்றனர். ஐயாயிரம் பேர்களிடமிருந்து இயேசு விலகிச் சென்ற காட்சியானது, நாம் இயேசுவின் மீது நமது எதிர்பார்ப்புகளை வைக்கும் பொழுது எவ்விதம் தவறானவர்களாய் இருக்க முடியும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றது. முழு உலகமும் தவறாகப் புரிந்து கொண்டிருப்பினும், அவர் தம்முடைய பிதாவின் சித்தத்தைச் செய்வதை வலியுறுத்தினார்.

நாமும் கூட நீண்டகாலத் தீர்வுகளைக் கண்ணோக்காமல் விடும்படி குறுகிய காலப் பிரச்சனைகளினால் பற்றிக் கொள்ளப்பட்டவர்களாகக்

*கூடும் என்பது இந்தக் குறுகிய வசனப் பகுதி நமக்கு அளிக்கின்ற இன்னொரு எச்சரிக்கையாக உள்ளது. இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள், ரோமானியர்களின் ஆதிக்கத்தின் கீழ் பதராய் அடிக்கப்பட்டார்கள். யாரேனும் ஒருவர் இஸ்ரவேலுக்கு அரசியல் விடுதலையைக் கொண்டு வரும் காலத்திற்கான ஏங்குதலுடன் அவர்கள் "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" (1:29) கவனியாது விட்டனர். நாம் அதை எப்பொழுதாவது செய்கின்றோமா? வாழ்வின் மிகப்பெரும் விஷயங்களின் காட்சியை இழந்து விடுமளவுக்கு நாம் உடனடியான பிரச்சனைகள் பற்றி எப்பொழுதாவது அதிகமாய்க் கவலைப் பட்டுள்ளோமா? பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக ஏங்குவதைக் காட்டிலும் அதிகமாக, வரிகள், வேதனை, போராட்டம், அழுத்தம் அல்லது பணி ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்காக நாம் எப்பொழுதாவது, அதிகமாய் ஏங்கியுள்ளோமா? இயேசு நமது எதிர்பார்ப்புகளுக்குப் பொருந்தி வந்து, நமது செயல் அட்டவணையைப் பின்பற்ற வேண்டும் என்று நாம் வலியுறுத்தும் பொழுது, அந்த நாளில் மலைப்பகுதியில் அந்த ஐயாயிரம் பேர் செய்ததையே நாமும் செய்கின்றோம் ... மற்றும் இயேசு அவர்களை விட்டு விலகி நடந்து சென்றார்!*

## *முடிவுரை*

*சுமார் இரு ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரு நாற்பரிமாணப் படத்தை[4] முதன் முறையாகப் பார்த்தேன். நான் எனது குடும்பத்துடன் ஒரு கடையில் இருந்தேன், அங்கு முக்காலித் தாங்கிகளின் மேல் வைக்கப்பட்டிருந்த சுவரொட்டிகளின் தொகுப்பொன்றைச் சுற்றி மக்கள் கூட்டம் ஒன்று நின்றிருந்தது. இந்தச் சுவரொட்டிகளில் கண்கவர் சித்திரங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த வண்ணம் நிறைந்த வடிவமைப்புகள் அடங்கியிருந்தன. நாங்கள் யாவரும் சுற்றி நின்று உற்று நோக்கினோம். அந்த வடிவமைப்புகளினுள் மறைந்திருந்த அழகுமிக்க உருவங்களைச் சிலர் கண்டறிந்தனர், ஆனால் மற்றவர்கள் ஒருக்காலும் "அவைகளைக்" காண முடியவில்லை.*

*யோவான் 6:1-15 ஒரு நாற்பரிமாணச் சித்திரம் போன்றதாக உள்ளது. அந்தச் சித்திரத்தின் அடியில் "வெற்றி!" என்ற ஒரே வார்த்தை மட்டுமே உள்ளது. நாம் யாவரும் சுற்றி நின்று மறைந்துள்ள உருவத்தைக் காண ஆவலாயிருக்கின்றோம். என்ன காணும்படி நாம் எதிர்பார்க்கின்றோம்? அநேகமாகச் சிலர் அதில் ரூபாய் நோட்டின் அடையாளத்தைக் காணும்படி எதிர்பார்க்கலாம், மற்றவர்கள் தங்கள் நாட்டின் தலைநகரக் கட்டிடத்தைக் காணும்படி எதிர்பார்க்கலாம். ஒரு சிலர் தாங்கள் அதில் ஒரு கட்டிடத்தைக் காணலாம் என்று உறுதியாய் உள்ளனர், மற்றும் பிறர் டாங்கிகள் மற்றும் குண்டுகளுடனான படையின் காட்சியொன்றை அதில் நோக்கும்படி எதிர்பார்க்கின்றனர். பிறகு, யாரோ ஒருவர் மறைந்துள்ள உருவத்தைக் காணத் தொடங்குகின்றார், மற்றும் அவர் "ஓ! நான் அதைக் காண்கின்றேன்!" என்று மெல்லிதாகக் கூறுகின்றார். ஒவ்வொருவராக,*

அனைவரும் அந்தச் சித்திரத்தைக் காணத்தொடங்குகின்றனர், மற்றும் அது எவரொருவரும் எதிர்பார்த்திருந்த மாதிரியில் இருப்பதில்லை. அதற்குப் பதில், "வெற்றி!" என்பது சிலுவையாக உள்ளது.

குறிப்புகள்

[1]John Barton, Work Report, December 1994. [2]இவ்வார்த்தை "ஒரு சின்னஞ்சிறு பையன்'' என்று அர்த்தப்படுகின்றது. [3]யோவான் 1:40, 41; 12:20-22. [4]"நாற்பரிமாணப்படம்" என்பது ஒரு மட்டத்திற்கும் அதிகமாக இருந்து காணப்பட வேண்டிய படமாக உள்ளது. முதல் பார்வையில் இது வண்ணங்களின் குழப்பலாகவே வழக்கமாய்த் தோன்றும். சரியான வழிமுறையில் ஒருவர் வடிவமைப்பினுள் உற்று நோக்கினால், இரண்டாவது உருவொன்று - ஒரு முப்பரிமாணப் படமானது - கவனத்திற்குள் வருகின்றது.

## "நான் இருக்கிறேன்" என்ற வகையில் இயேசு

சுவிசேஷ எழுத்தாளர்கள் நால்வரிலும், யோவான் அவர்கள், இயேசு தம்மைப் பற்றிக் கூறிய உண்மையான உரிமைகோருதல்களைப் பதிவு செய்ததின் மூலம் கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு அதிகமான வலியுறுத்தத்தை அளிக்கின்றார். கிறிஸ்து, "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" (8:58) என்று உரைத்த பொழுது, அவர், எரியும் முட்புதரில் மோசேக்கு வெளியாக்கப்பட்ட தேவனுடைய பெயரையே தமக்கு உரிமை கோரினார் என்பதை மக்கள் அறிந்தனர் (யாத். 3:14). இதனால் தான் மக்கள் அவரை நிரூபணமற்ற தேவதூஷணம் கூறியதாகக் கல்லெறிய முயற்சி செய்தனர். கிறிஸ்து நித்தியத்திற்கும் நான் இருக்கிறேன் என்பவராயிருந்தார் மற்றும் இருக்கிறார். உறுதிப்பாடுகளின் ஒரு வரிசையில் அவர் அந்த உரிமைகோருதலைப் பெருக்கப்படுத்தினார்:

1. ஜீவ அப்பம் நானே (6:35).
2. நான் உலகத்திக்கு ஒளியாயிருக்கிறேன் (8:12; 9:5).
3. நானே ... வாசல் (10:7).
4. நானே நல்ல மேய்ப்பன் (10:11, 14).
5. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (11:25).
6. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (14:6).
7. நான் மெய்யான திராட்சச் செடி (15:1).

யோவான் சுவிசேஷத்தில் உள்ள ஆதரவான மற்ற கூற்றுக்களில் ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' (10:30) மற்றும் ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'' (14:9) ஆகியவையும் உள்ளடங்கு கின்றன.